### கொரிந்தியர் 1 6:9-10

அநீதர்கள் சர்வேசுரனுடைய இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ள மாட்டார்கள் என்று அறியீர்களோ? மோசம் போகாதேயுங்கள்: தூர்த்தரும், விக்கிரக ஆராதனைக்காரரும், விபசாரக் காரரும், (கலாத். 5:19; எபே. 5:5.) சிற்றின்பப்பிரியரும், ஆணும் ஆணுமாய் மோகிக்கிறவர்களும், திருடரும், பொருளாசைக்காரரும், குடி வெறியரும் உதாசினரும், கொள்ளைக்காரரும் சர்வேசுரனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிப்பதில்லை.

### அர்ச். மத்தேயு சுவிசேஷம் 6:33

ஆகையால் சர்வேசுரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் முந்தபந்தத் தேடுங்கள். அப்போது இவைகள் எல்லாம் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்.

### அர்ச். மத்தேயு சுவிசேஷம் 19:14

ஆனால் சேசுநாதர் அவர்களை நோக்கி; சிறுவர்களைச் சும்மா விடுங்கள். அவர்களை என்னிடத்தில் வரத் தடை செய்யாதேயுங்கள். ஏனெனில் மோட்ச இராச்சியம் அப்படிப்பட்டவர்களு டையது என்று சொல்லி, (மத். 18:3.)

### நாளாகமம் 1 29:11

ஆண்டவரே! மகத்துவமும், வல்லமையும், மகிமையும், செயமும் தேவரீருடையது. உமக்கே தோத்திரம். பரலோகத்திலும் பூலோகத்திலும் இருக்கின்ற அனைத்தும் உம்முடைய தாமே. அரசாட்சி, கர்த்தரே, உம் முடையது. தேவரீர் எல்லோருக்கும் ஆண்டவராக உயர்ந்திருக்கிறீர்.

### அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 12:32

சிறு மந்தையே, நீங்கள் பயப்படாதேயுங்கள்; ஏனெனில் உங்களுக்குத் தம்முடைய இராச்சியத்தைத் தரும்படி உங்கள் பிதாவுக்குச் சித்தமாயிற்று.

### அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 3:3

சேசுநாதர் அவனுக்கு மறுமொழி யாக: ஒருவன் மறுபடியும் பிறவாதிருந் தால், சர்வேசுரனுடைய இராச்சியத்தைக் காணமாட்டானென்று மெய்யாகவே, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். (அரு. 1:13; 1 இரா. 1:23.)

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 4:17

அது முதல் சேசுநாதர், தவஞ் செய்யுங்கள், ஏனெனில் மோட்ச இராச்சியம் சமீபித்திருக்கிறதென்று பிரசங்கிக்கத் தொடங்கினார். (மாற். 1:15.)

எபேசியர் 2:19-20

ஆகையால் நீங்கள் இனி அந்நியரும், பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களுடைய நகரத்தாரும், சர்வேசுரனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் எனப்பட்ட அஸ்திவாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களாயிருக்கிறீர்கள். அதற்குக் கிறீஸ்து சேசுநாதர் தாமே ஆதிமூலைக்கல்லாயிருக்கிறார்.

சக்காரியாஸ் ஆகமம் 14:9

ஆண்டவர் அகிலமனைத் திற்கும் அரசராயிருப்பார்; அந்நாளில் ஆண்டவர் ஏகரெனவிருப்பார்; அவர் அபிதானமொன்றே வந்திக்கப் பெற்றிருக்கும்.

இசாயாஸ் ஆகமம் 52:7

பர்வதங்கள்மீது சமாதானத் தைப் போதித்தும் சுவிசேஷத்தை அறிவித்தும், இரட்சணியத்தைத் தெரிவித்தும், சியோனைப் பார்த்து: உன் தேவன் உன்மீது இராஷஜரீகம் நடத்துவர் எனச் சொல்லியும் வரும் பிரசங்கிகளுடைய பாதாரங்கள் எவ்வளவோ அழகு வாய்ந்தவனவா யிருக்கின்றன (நாகூம்.1:15; உரோ. 10:15).

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 5:10

நீதியினிமித்தம் உபத்திரவப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்: ஏனெனில் மோட்ச இராட்சியம் அவர்களுடையது. (1 இரா . 2:20; 3:14; 4:14.)

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 3:5

சேசுநாதர் பிரத்தியுத்தாரமாக: ஒருவன் ஷஜலத்தினாலும், இஸ்பிரீத்துசாந்துவினாலும் மறுபிறப்பு அடையாதிருந்தால், சர்வேசுரனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டானென்று மெய்யாகவே, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மூ 4-5. மனுஷரெல்லோரும் ஷெஜன்மதோஷத்தோடு உற்பவிக்கிறதினாலே பிறக்கிறபோது சரீர உயிரடைந்திருந்தாலும், ஆத்தும உயிராகிய இஷ்டப்பிரசாதமில்லாமல் பிறக்கிறார்கள். ஆகையால் ஷெஜன்ம தோஷத்தைக் கழுவுகிற ஞானஸ்நானத்தை அவசியமாய்ப் பெற்றுத் தேவ இஷ்டப்பிரசாதமாகிற ஞான உயிரையும், ஞானப்பிறப்பையும் அடையவேண்டியது. கர்த்தர் இவ்விடத்தில் குறிக்கிற மறுபிறப்பும், ஞானப்பிறப்பும் இதுவேயன்றி, சரீரப் பிறப்புமல்ல, மறு ஷெஜனனமுமல்ல என்றறியவும்.

சங்கீதங்கள் 24:10

ஆண்டவருடைய ஏற்பாட் டையும், அவருடைய முறைமைகளை யுங் கைக்கொள்ளுகிறவர்களுக்கு அவருடைய பாதைகளெல்லாங் கிருபையுஞ் சத்தியமுமாயிருக்கும்.

அர்ச். மாற்கு சுவிசேஷம் 1:15

காலம் நிறைவேறி, சர்வேசுர னுடைய இராச்சியம் சமீபமாயிற்று. பச்சாத்தாபப்பட்டுச் சுவிசேஷத்தை விசுவசியுங்கள் என்றார்.

இசாயாஸ் ஆகமம் 33:22

ஏனெனில், ஆண்டவர் நமது நீதிக்கர்த்தர், ஆண்டவர் நமது வேத நாயகர், ஆண்டவர் நமது அரசு, அவரே நம்மைக் காப்பார்.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 10:9

அவ்விடத்திலுள்ள நோயாளிகளைச் சொஸ்தமாக்கி, சர்வேசுரனுடைய இராச்சியம் உங்களுக்குச் சமீபித்தது என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்.